திரைப்பட நகரை 15 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி வருகின்றார்கள். ஆகவே, திரைப்படத் துறை இன்றைக்கு வளர்ச்சிமிக்க ஒரு துறையாக புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் தமிழ்த் திரைப்படங்கள் கட்டாயம் காட்டப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு அக்கறை உள்ள அரசாகச் செயல்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு தமிழ் மொழிப் படத்திற்கு பங்கம் எந்தப் பக்கம் வந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டு இந்த அரசு சும்மா இருக்காது என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 116, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

116—

திருப்பூரிலுள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தை அவினாசிக்கு மாற்றுதல்.

* 21522—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தை (I.T.I.) அவினாசிக்கு இலவசமாக இடம் பெற்று மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தை அவினாசிக்கு மாற்ற அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரம் தொழில்கள் நிறைந்தது. இது அவிநாசியிலிருந்து 12 கி.மீ. தூரத்தில்தான் உள்ளது. இலட்சக் கணக்கான தொழிலதிபர்கள் வாடகைக்கு இடம் கிடைக்காது மிகுந்த இன்னல்களுக்கு இடையில் பக்கத்து ஊர்களில் இருந்துகொண்டு திருப்பூரில் தொழில் நடத்தி வருகின்றனர். வாடகைக்குத் திருப்பூரில் இடம் கிடைப்பது என்பது

1994 மார்ச் 28]

குதிரைக் கொம்பாக உள்ளது. வாடகையும் அதிகம். இதனால் அவர்களுக்கு மிகுந்த செலவும், இடநெருக்கடியும் உள்ள சூழ்நிலையில் படிப்பதற்குச் சிரமம் ஏற்படுகிறது. மிகுந்த காற்றோட்டமும், போதிய இடமும் அவிநாசியில் இருக்கிறது. மனநலம், உடல் நலம், இடவிஸ்தீரணம், இவை ஒழுங்காக இருந்தால் நல்லபடியாகக் கல்வி கற்று, மிகத் திறமைசாலிகளாக உருவாக அது ஏதுவாகும். அதுவும் அவிநாசியிலிருந்தால் திருப்பூர், அவிநாசி மற்றும் கோவை மாவட்டம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெண்கள் வந்து படிப்பதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலை ஏற்படும். அண்ணன் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சகோதரிக்குச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்களுக்கென முக்கியத்துவம் கொடுத்து உழைத்துவரும் - நினைத்ததை முடித்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், முடிப்பதை நினைப்பவர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே-அன்னை தெரசாவால் ஆசீர்வதிக்கப்பெற்ற நமது அன்னையின் உத்தரவுபெற்று இதனை அவிநாசிக்கு மாற்றித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்போது பெண்கள் தொழில் பயிற்சி நிலையம் சிறந்த முறையில் 1984 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இதில் 92 பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இங்கே, ரேடியோ, டி.வி. சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புகளும், ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சியும் கற்றுத்தரப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இரண்டும், தனியார் தொழில் பயிற்சி நிலையங்கள் 28-ம், ஆக மொத்தம் 30 தொழில் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவிநாசியில் உள்ள பெண்கள் 20 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பூரிலோ அல்லது கோயம்புத்தூரிலோ சென்று தொழிற்பயிற்சி பெற்று வரலாம். மேலும் அவிநாசியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள சூலூரில் ஒரு தொழிற்பயிற்சி மையம் இருக்கிறது. ஆகவே, தற்போது திருப்பூரில் இயங்கி வரும் தொழிற்பயிற்சி நிலையத்தை அவிநாசிக்கு மாற்ற வேண்டியதில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவிநாசியிலிருந்து திருப்பூர் 20 கி.மீட்டர் என்றும், சூலூர் 10 கி.மீட்டர் என்றும் சொன்னார்கள். அவிநாசியிலிருந்து சூலூர் 25 கி.மீட்டரும், திருப்பூர் 10 கி.மீட்டரும்தான் இருக்கின்றன. பெண்களுக்கென 15 அம்சத் தேவைகளை வலியுறுத்தி, பெண்கள் மேம்பாட்டுக்கு வழிவகுத்து அண்டை நாடுகளுக்கெல்லாம் வழி காட்டிக்கொண்டிருக்கிற நமது அம்மா அவர்கள், ** பிறந்து, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வளர்ந்து ** பேசிக் கொண்டிருப்பவர்களையெல்லாம் வைத்து, நமது சாதனைகளைக் கொண்டாடி...... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக்குறிப்பிலே இருக்கக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : உண்மைக்குப் புறம்பாகப் பேசிக் கொண்டிருப்பவர்களையெல்லாம் வைத்து, நமது சாதனைகளைக் கொண்டாடி அவர்கள் முகத்தில் கரியைப் பூச நமது அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா? நாங்கள் இலவசமாக இடம் பெற்றுத் தருகிறோம். அடிஷனலாக இன்னொரு ஐ.டி.ஐ. அவிநாசிக்குக் கொண்டு வந்து பெண்களுக்கு ஒரு மேம்பாட்டினைச் செய்து தர அன்னையின் ஆசியைப் பெற்றுத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய முயற்சியால் தனியார் பயிற்சி நிலையம் அமைக்க முன்வந்தால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொழில் பயிற்சி நிலையத்தில் மாற்றமில்லை என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கான இடத்தை நாங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டால் சிறப்பான முறையிலே தொழில் நகரத்திலே செயல்படுவதற்குண்டான வாய்ப்பு உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சீனியம்மாள் வேறு முயற்சி மேற்கொண்டு அவினாசிக்குக் கொண்டு போனால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே ஒரு நர்சரி டிரெயினிங் வைத்திருக்கிறார்கள். அதை அவினாசிக்குக் கொண்டு போகாமல் திருப்பூரிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை முதலிலே அவினாசிக்குக் கொண்டு போகச் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை. மாண்புமிகு முன்னாள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 மார்ச் 28]

பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன் திருப்பூரில் இருக்கின்ற கால்நடை மருத்துவமனையைக் கேட்டார். அவினாசியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஐ.டி.ஐ. கேட்கிறார்கள். ஆகவே, திருப்பூரிலே குடியிருப்பதால் தொல்லை. அவரவர்கள் தொகுதியிலே சென்று அவர்கள் குடியிருக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்தால் சிரமங்கள் குறைவாக இருக்கும். (மேசையை தட்டும் ஒலி) நான் எந்த நேரத்திலும் விழிப்போடு இருந்துகொண்டிருக்க வேண்டிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அந்தத் தொகுதியிலே அவர்கள் பணியாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தங்கள் சொந்தத்திற்கேற்ப எங்கேயும் தங்கிக்கொள்ளலாம். சென்னையிலேயே பல உறுப்பினர்கள் தங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தொகுதிக்குப் போனால் கூட நல்லதுதான். (சிரிப்பு).

வினா எண் 117, திரு. சோ. பாலகிருஷ்ணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

117-

முதுகுளத்தூரில் அபிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்.

* 17473—**திரு. சோ. பாலகிருஷ்ணன் :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் மற்றும் கமுதி ஊராட்சி ஒன்றியங்களை மூன்றாகப் பிரித்து, அபிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது தொடர்பான நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதி ஒன்றியம் என்பது மிகப் பெரிய ஒன்றியம். 60